DINA THANTHI

26 SEP 2021

PAGE 11

# புதுவை பல்கலைக்கழகத்தில் புத்தாக்க பயிற்சி

காலாப்பட்டு, செப்.26–

புதுவை பல்கலைக்கழகம் சார்பில் மேலாண்மை மற்றும் நூலக அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளுக்கு புத்தாக்க பயிற்சி நடந்தது. இணை பேராசிரியர் பாஞ்.ராம லிங்கம் வரவேற்று பேசினார். பேராசிரியர் லலிதா ராமகிருஷ்ணன், மேலாண்மை துறை புத்துணர்ச்சி பயிற்சி அறிக்கையை சமர்ப்பித்தார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் செல்வம் கலந்து கொண்டு சுய மற்றும் வெளிப்புற தரத்தை அளவிடுதல், மதிப்பீடு செய்வதை பற்றி குறிப்பிட்டார். மேலும் உலகின் அனைத்து மனித முயற்சிகளும் தரமாக இருக்கவேண்டும் என்றும், பாலின சமத்துவத்தின் முக்கியத்துவம், வேலையிடம், கடின திறன்கள் மற்றும் மென்மையான திறன்கள், கற்றல் மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். முடிவில் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் லலிதா ராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

DINAMALAR

25 SEP 2021.

PAGE 1

# புதுச்சேரி பல்கலை., புத்தாக்க பயிற்சி முகாம்

**புதுச்சேரி, செப். 25–**

புதுச்சேரி பல்கலைக் கழகம் சார்பில், யு.ஜி.சி., எச்.ஆர்.டி.சி., மேலாண்மை மற்றும் நூலக அறிவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பதுறைகளுக்கு புத்தாக்க பயிற்சி முகாம் நடந்தது.

யு.ஜி.சி.,எச்.ஆர்.டி.சி., இணைப் பேராசிரியர் பாஞ்., ராமலிங்கம் வரவேற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வம் சிறப்புரையாற்றினார்.

இதில் அந்தமான் நிக்கோபாரைச் சேர்ந்த முனைவர் அஜிதா, திருப்பூர் டாக்டர் மிது அஞ்சலி ஆகியோர் பேசினர்.

பேராசிரியர் லலிதா ராமகிருஷ்ணன், மேலாண்மை துறை, புத்துணர்ச்சி பயிற்சி அறிக்கை சமர்ப்பித்தார்.

பின்லாந்து மற்றும் டி.சி.எஸ், – ஐ.ஐ.டி., மும்பை. ஐ.ஐ.டி., காந்திநகர், ஐ.ஐ.டி., ரூர்க் போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

ஐ.ஏ.எஸ்., மற்றும் ஐ.எஃப்.எஸ்., அதிகாரிகளும் வெவ்வேறு அமர்வுகளுக்கு சிறப்பு பேச்சாளர்களாக பங்கேற்றனர்.

இணைப் பேராசிரியர் சேவுகன், நூலகம் மற்றும் தகவல் அறிவியலில் புத்துணர்ச்சி பயிற்சி அறிக்கையை சமர்ப்பித்தார்.

பயிற்சியின் போது நூலகப் போர்ட்டலின் வடிவமைப்பு மற்றும்மேம்பாடு, ஒரு தரமான வெளியீடு மற்றும் ஒரு தயாரிப்பினை சந்தைப்படுத்துல் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.